**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 400 /2018**

PW1 – ஐயம்மாள் க/பெ முனியாண்டி
நாள்–21.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கில் தட்சிணாமூர்த்தி கலாவதி தவிர வேறு பிரதிவாதிகள் இல்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு நான் 2 வது மனைவி என்றால் சரிதான். எனது கணவரின் முதல் மனைவி இறந்துவிட்டார். அவர் பெயரும் ஐயம்மாள் தான். முதல் மனைவி இருக்கும் போதே என்னை திருமணம் செய்து கொண்டாரா என்றால் சரியல்ல. இறந்த பிறகு தான் என்னை திருமணம் செய்து கொண்டார். முதல் மனைவிக்கு அழகர், தனலெட்சுமி, சேகர் ஆகியோர்கள் வாரிசு மக்கள் என்றால் சரிதான். எனக்கு தேவேந்திரன் என்ற ஒரே மகன் மட்டும் உண்டு. எனது கணவர் இறந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் சுமார் 35 ஆண்டுகள் ஆகும்.

நான் எத்தனை ஆண்டுகள் சென்னையில் வசித்து வந்தேன் என்றால் எனது அக்கா வீட்டிற்கு செல்வேன் 1 மாதத்திற்குள் வந்துவிடுவேன். எனது பூர்வீகம் சென்னை என்றால் சரியல்ல. சூரைக்காடு எனது பூர்வீகம் ஆகும். தாவா சொத்து முனியாண்டிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து முனியாண்டி வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியம் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றம் பாகப்பிரிவினை வழக்கின் மூலம் அடைந்த சொத்தாகும். பாகப்பிரிவினை வழக்கு எத்தனை ஆண்டுகளாக நடந்தது என்றால் 30 ஆண்டுகளாக நடந்தது. பாகப்பிரிவினையில் எனக்கு மொத்தம் 8 மா நிலம் கிடைத்ததா என்றால் 7 ½ மா நிலம் கிடைத்தது.

தாவா சொத்தை நான் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கான சிட்டா அடங்கல், காப்பீடு ரசீது நிவாரணம் பெற்றதற்கான சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை நான் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கு கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளாரா என்றால் வழங்கியுள்ளார், தாக்கல் செய்துள்ளேன். நானோ எனது கணவரோ அனுபவம் செய்த போது தாவா சொத்தில் ஆழ்துளை கிணறு இல்லை என்றால் சரிதான். எனது பெயரில் இலவச மின் இணைப்பும் இல்லை என்றால் சரிதான். வெங்கடாசலம் மனைவி ஆட்சியம்மாளை தெரியுமா என்றால் தெரியும். சுமார் 30, 40 ஆண்டுகளாக தெரியுமா என்றால் சரிதான். எனது பங்கிற்கு மேற்கில் ஆட்சியம்மாள் நிலம் உள்ளது என்றால் சரிதான்.

ஆட்சியம்மாளிடம் ரூ.10,000/-க்கு போக்கியம் வைத்துள்ளேன் என்றால் வாங்கியிருந்தேன். ஆனால் திரும்ப கொடுத்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள ரேகை என்னுடையதுதான். **அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்து 3 அமைப்பாக உள்ளது என்றால் சரிதான். எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் நிலம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் 7 ½ மா நிலம் உள்ளது. 7 ½ மா நிலம் எத்தனை புல எண்ணில் உள்ளது என்றால் 4 புல எண்ணில் உள்ளது. நான் எத்தனை மா நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 ½ மா நிலத்திற்குத்தான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நிலத்தின் புல எண்ணும், நான்கெல்லையும் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

15.11.1990 தேதியிட்ட ஆவணத்தில் கண்ட நான்கெல்லைகள் சரியானதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் ஆட்சியம்மாளுக்கு விற்பனைக்காகவும், போக்கியத்திற்காகவும் தாவா சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. 34 வருடங்களாக தாவா சொத்து 1,2 பிரதிவாதிகள் வசம் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

நான் 34 ஆண்டுகளாக ஊரிலேயே இல்லை என்றும், சென்னையில் வசித்து வருகிறேன் என்றும், சொத்தை அபகரிப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த நில அபகரிப்பு புகாரில் 1,2 பிரதிவாதிகள் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

நான் மாவட்ட பதிவாளரிடம் 2–ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணத்தை ரத்து செய்ய மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் தான் நான் கொடுத்த மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது சுவாதீனத்தில் இருப்பதற்கான எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.